[2020] 4 S.C.R. 1163

ஜக்மாயில் சிங் மற்றும் ஒருவர்

எதிர்

கரம்ஜித் சிங் மற்றும் பலர்

(உரிமையியல் மேல்முறையீட்டு எண் 1889 / 2020)

மே 13, 2020

மாண்புமிகு நீதியரசர் திரு. நவின் சின்ஹா

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. கிருஷ்ணா முராரி

சாட்சிய சட்டம், 1872 – பிரிவுகள் 65 மற்றும் 66 – ஒரு ஆவணம் தொடர்பாக இரண்டாம் நிலை சாட்சியம் அளிப்பதற்கான உரிமை– மேல்முறையீட்டாளர், நிலத்தைப் பொறுத்து உரிமையினை விளம்புகை செய்யவும், 1 முதல் 3 எதிர்மேல்முறையீட்டாளர்களின் முன்பாத்தியஸ்தர்களுக்கு ஆதரவாக, உதவி ஆட்சியர், மாறுதலுக்கு அனுமதியளித்ததை சட்டவிரோதமானது, இல்லா மற்றும் செல்லா நிலையானது என விளம்புகை செய்யவும் வழக்கு தாக்கல் செய்தார்– மேல்முறையீட்டாளர் வழக்கு நிலுவையில் இருக்கும்போது, இரண்டாம் நிலை சாட்சியத்தின் மூலம் உயில் ஆவணத்தை நிரூபிக்க அனுமதிகேட்டு பிரிவுகள்65/66 ன் கீழ் விண்ணப்பம் தாக்கல் செய்தார்– விசாரணை நீதிமன்றம் மனுவை அனுமதித்தது– எனினும் உயர்நீதிமன்றம், அசல் உயிலை கோரியபடி தாக்கல் செய்ய, மேல்முறையீட்டாளர் பிரிவு 66ன் கீழ் வருவாய் அதிகாரிகளுக்கு

அறிவிப்பு கொடுத்திருக்க வேண்டும் என முடிவு செய்து, விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவை ரத்து செய்தது – அதன்படி மேல்முறையீட்டாளர்கள் பிரிவு 66ன் கீழ் விண்ணப்பம் தாக்கல் செய்தனர் – உயிலின் அசலினைத் தாக்கல் செய்ய வருவாய் அதிகாரிகளுக்கு அறிவிப்பு வழங்கப்பட்டது, ஆனால் அவர்கள் உயிலைத் தாக்கல் செய்யத் தவறிவிட்டார்கள் – விசாரணை நீதிமன்றம் அந்த விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்தது – மேல்முறையீட்டாளர்கள் உயர்நீதிமன்றத்தின் முன்பு வகுமுறைக்கூறு 227–ன் கீழ் சீராய்வு மனு தாக்கல் செய்து, அதிலும் தோல்வியுற்றனர் – எனவே இந்த மேல்முறையீடு – தீர்வு: பிரிவு 65ன் படி, ஒரு ஆவணத்தின் அசல், அந்த ஆவணம் யாருக்கு ஏதிராக தாக்கல் செய்யப்பட வேண்டுமோ அந்த நபரின் உடைமையில் அல்லது நீதிமன்ற நடவடிக்கைகளால் தொடர்பு கொள்ள முடியாத நபர் அல்லது நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படாத நபரின் கைவசம் அல்லது அதிகாரத்தில் இருப்பதாகத் தோன்றினாலோ, காட்டினாலோ அல்லது அதனைத் தாக்கல் செய்யச் சட்டப்படி கட்டுப்பட்ட ஒரு நபருக்கு, பிரிவு 66ன் கீழ் அறிவிப்பு கொடுத்த பிறகும், அந்த நபர் அதனைத் தாக்கல் செய்யாவிட்டாலோ, அந்த ஆவணத்தின் இருப்பு, நிலை அல்லது உள்ளடக்கம் ஆகியவற்றைப் பொறுத்து இரண்டாம் நிலை சாட்சியம் அளிக்கலாம் – சாட்சிய சட்டத்தின் கீழ், பொருண்மைகள் முதன்மை சாட்சியத்தின் மூலம் நிரூபிக்கப்பட வேண்டும் என்பதும், இரண்டாம் நிலை சாட்சியமானது அந்த விதிக்கான விலக்கு என்பதும், அதற்கு முதன்மை சாட்சியத்தின் இருப்பை விளக்கும் பொருட்டு அடிப்படை சங்கதிகளை நிறுவிக்காட்ட வேண்டும்

என்பதும் உறுதியாக்கப்பட்ட சட்டமாகும் – இந்த வழக்கில் வருவாய் அதிகாரிகள் இருவருமே உயிலின் அசலைத் தாக்கல் செய்ய தவறியதோடு, உயிலின் இருப்பினை இருவருமே மறுக்கவில்லை என்பதை அவர்களது குறுக்கு விசாரணை காட்டுகிறது – மேலும் உயிலின் இருப்பு தொடர்பான சாட்சியம், பிரச்சனைக்குறிய உயிலினை எழுதியவரை விசாரித்ததின் மூலம் நிறுவிக்காட்டப்பட்டுள்ளது – இரண்டாம் நிலை சாட்சியம் வழங்குவதற்கான உரிமையினை நிறுவிக்காட்டும் அடிப்படை சங்கதிகளை மேல்முறையீட்டாளர் வகுத்துறைத்துள்ளபோது, இரண்டாம் நிலை சாட்சியத்தினை முன்னிறுத்த அவர்களுக்கு உயர்நீதிமன்றம் ஒரு சந்தர்ப்பம் அளித்திருக்க வேண்டும். சாட்சியங்களை சரிவர பரிசீலிக்காமல், முன் தேவையான நிபந்தனை, அதாவது உயிலின் இருப்பு கோப்பில் நிரூபிக்கப்படாமல் இருக்கிறது எனத் தீர்வு கண்டு, இரண்டாம் நிலை சாட்சியம் அளிக்கும் வாய்ப்பினை மேல்முறையீட்டாளர்களுக்கு வழங்க மறுத்து, மிகப்பெரிய சட்டரீதியான தவறு இழைத்துவிட்டது – பிரச்சனைக்குரிய உயில் தொடர்பாக, இரண்டாம் நிலை சாட்சியம் அளிக்க மேல்முறையீட்டாளர்கள் உரிமையுடையவர்கள்.

மேல்முறையீட்டை அனுமதித்து இந்த நீதிமன்றம் வழங்கிய

தீர்வு: கிராம கணக்காளர் தனது குறுக்கு விசாரணையில், அந்த பகுதிக்கு மற்றொரு கிராம கணக்காளர் இருப்பதாகவும், அத்தகைய உயில் மற்றொரு கிராம கணக்காளரிடம் தாக்கல் செய்யப்பட்டதா என்பது அவருக்குத் தெரியாது என்றும் கூறியுள்ளார். மேலும் அவர் ஆவணமானது 25 வருடம் பழமையானது என்றும், அவர் தற்சமயம்

அந்த பகுதியில் பணியமர்த்தப்படவில்லை என்றும், எனவே உயிலினைத் தேடி கண்டுபிடிக்க முடியவில்லை என்றும் கூறியுள்ளார். மேலும், அ.சா.4, *"பதிவு செய்யப்பட்ட உயில் ஒன்று இருந்தது என்றும், அது தொடர்பாகக் குறிக்கப்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளார். பாபு சிங்கின் கட்சி (பதிவுசெய்யப்படாதது) உயில், ஒன்று இருந்தது என்றும் மாற்றங்கள் பதிவு செய்வதற்கு அசா. 3 –இடம் ஒப்படைக்கப்பட்டது என ஒப்புக்கொண்டுள்ளார்…".* மேலும் உயிலின் இருப்பு தொடர்பான முதல் நிலை சாட்சியம், பிரச்சனைக்குரிய உயிலினை எழுதியவரான அ.சா.1– ஐ விசாரித்ததின் மூலம் நிறுவிக்காட்டப்பட்டுள்ளது. உயர்நீதிமன்றம், சாட்சியங்களை சரிவர பரிசீலிக்காமல் முன் தேவையான நிபந்தனையினை, அதாவது உயிலின் இருப்பு கோப்பில் நிரூபிக்கப்படாமல் இருக்கிறது எனத் தீர்வு கண்டு இரண்டாம் நிலை சாட்சியம் வழங்க மேல்முறையீட்டாளருக்கு வாய்ப்பினை மறுத்து கடுமையான சட்டரீதியான தவறு இழைத்துவிட்டது. பிரச்சனைக்குரிய உயில் தொடர்பாக, இரண்டாம் நிலை சாட்சியத்தை முன்னிறுத்த மேல்முறையீட்டாளர்கள் உரிமையுடையவர்கள் ஆவர். [பத்திகள் 15, 16, 18, 19]

அஷோக் துலிசந்த் எதிர் மாதவ்லால் டுபே மற்றும் ஒருவர் [1976] 1 எஸ்சிஆர் 246; *ராகேஷ் மோஹிந்த்தரா எதிர் அனிதா பெரி மற்றும் பலர்* (2016) 16 எஸ்சிசி 483; [2015] 13 எஸ்சிஆர் 1158; *எச். சித்திக் (இறப்பு) சட்ட பிரதிநிதிகள் மூலமாக எதிர் ஏ. ராமலிங்கம்* (2011) 4 எஸ்சிசி 240 ; [2011] 5 எஸ்சிஆர் 587 – பார்வையிடப்பட்டது.

<u>பார்வையிடப்பட்ட வழக்குகள்</u>

[1976] 1 எஸ்சிஆர் 246 –ல்	**பத்தி 12**	**பார்வையிடப்பட்டது**
[2015] 13 எஸ்சிஆர் 1158 –ல்	**பத்தி13**	**பார்வையிடப்பட்டது**
[2011] 5 எஸ்சிஆர் 587 –ல்	**பத்தி14**	**பார்வையிடப்பட்டது**

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு : உரிமையியல் மேல்முறையீட்டு எண் 1889/2020.

சண்டிகரில் உள்ள பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர்நீதிமன்றம், 09.01.2017 அன்று உரிமையியல் சீராய்வு மனு எண் 7271 / 2015 ல் பிறப்பித்தத் தீர்ப்புரை மற்றும் உத்தரவிலிருந்து எழுகிறது.

மேல்முறையீட்டாளர்களுக்காக ஆர். ஆனந்த் பத்மநாபன், அரவிந்த்.சி, தேவரதி, சஷி பூஷன் குமார், வழக்கறிஞர்கள்.

எதிர் மேல்முறையீட்டாளர்களுக்காக வழக்கறிஞர் கௌரவ்.

இந்நீதிமன்றத்தின் தீர்ப்பினைப் பிறப்பித்தவர் **மாண்புமிகு நீதியரசர் திரு. கிருஷ்ணா முராரி.**

1. மாற்றத்திற்காக கிராம கணக்காளரிடம் ஒப்படைக்கப்பட்ட அசல் உயிலை மீட்டெடுக்க முடியாததால், இரண்டாம் நிலை சாட்சியத்தின் மூலம் மேல்முறையீட்டாளர்களுக்கு ஆதரவாக பாபுசிங் என்பவர் நிறைவேற்றிய 24.01.1989 தேதியிட்ட உயில் ஆவணத்தை நிரூபிக்க அனுமதி வேண்டி மேல்முறையீட்டாளர்கள் இந்திய சாட்சிய சட்டத்தின் பிரிவு 65 மற்றும் 66–ன் கீழ் தாக்கல் செய்த விண்ணப்பத்தில், மோகா உரிமையியல் நீதிபதி (இளநிலை பிரிவு)

பிறப்பித்த உத்தரவை உறுதிசெய்து, உரிமையியல் சீராய்வு மனு எண் 7271/ 2015 ல் சண்டிகரில் உள்ள பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர்நீதிமன்றம், 09.01.2020 அன்று பிறப்பித்த உத்தரவினை எதிர்த்து இந்த மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்த போது உயர்நீதிமன்றம், உயிலின் இருப்பு தொடர்பான முன்நிபந்தனையினை நிரூபிக்காததால் இரண்டாம் நிலை சாட்சியத்தின் மூலம் உயிலை அங்கீகரிக்க அனுமதிக்க முடியாது என்று கண்டுள்ளது.

2. வழக்கு பொருண்மைகளின் சுருக்கமானது, மோகா மாவட்டம் & வட்டம், கொக்ரி கலன் கிராமத்தில் அமைந்துள்ள பூமன் சிங்கின் மகன் பாபு சிங்கிற்குச் சொந்தமான நிலத்தில், மேல்முறையீட்டாளர்கள் தலா ½ பங்கிற்கு உரிமையாளர் என விளம்புகை செய்யவும், 28.02.1991 தேதியிட்ட மாறுதல் பதிவு எண் 9971 மற்றும் 25.02.1991 தேதியிட்ட மாறுதல் பதிவு எண் 9359 ஆகிய இரண்டும், 20.03.1988 தேதியிட்ட போலி உயிலின் அடிப்படையில், பல்தேவ் சிங் (1 மற்றும் 2 எதிர்மேல்முறையீட்டாளர்களின் முன்பாத்தியஸ்தர்கள்) மற்றும் ஷம்ஷேர் சிங் (3ம் எதிர்மேல்முறையீட்டாளர்) ஆகியோருக்கு ஆதரவாக, மோகா இரண்டாம் நிலை துணை ஆட்சியரால் அனுமதிக்கப்பட்டுள்ளதால், அவற்றைச் சட்டவிரோதமானது, இல்லா மற்றும் செல்லா நிலையது என விளம்புகை செய்யவும் கோரி, மேல்முறையீட்டாளர்கள், அசல் வழக்கு தாக்கல் செய்தனர். மேலும் அதன் தொடர்ச்சியாக, வழக்கு சொத்தினைப் பராதீனம் செய்தல், உரிமை மாற்றம் செய்தல் அல்லது அடமானம் வைத்தல் ஆகிய

செயல்களைச் செய்வதிலிருந்து எதிர்மேல்முறையீட்டாளர்களைத் தடுத்து, நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியிருந்தனர்.

3. மேற்படி வழக்கு நிலுவையில் இருக்கும் போது, 24.01.1989 தேதியிட்ட உயிலை இரண்டாம் நிலை சாட்சியத்தின் மூலம் நிரூபிக்க அனுமதிகேட்டு, மேல்முறையீட்டாளர்கள், சாட்சிய சட்டத்தின் பிரிவு 65/66 ன் கீழ் ஒரு விண்ணப்பம் தாக்கல் செய்தனர். அந்த விண்ணப்பம், விசாரணை நீதிமன்றத்தால் 04.07.2014 தேதியிட்ட உத்தரவின்படி அனுமதிக்கப்பட்டது.

4. அந்த உத்தரவினால் மனக்குறையுற்று எதிர்மேல்முறையீட்டாளர்கள் தாக்கல் செய்த உரிமையியல் சீராய்வு மனு எண் 4645/2014, உயர்நீதிமன்றத்தால் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டு அனுமதிக்கப்பட்டது:-

"அசல் உயில், வருவாய் அதிகாரிகள் வசம் உள்ளதாக மேல்முறையீட்டாளர்கள் கூறும்போது, இச்சட்டத்தின் பிரிவு 66-ன் கீழ் அதனைத் தாக்கல் செய்யுமாறு அவருக்கு அறிவிப்பு வழங்கியிருக்க வேண்டும். ஒருவேளை உயிலானது தொலைந்ததாகக் கூறும் பட்சத்தில், இரண்டாம் நிலை சாட்சியத்தினை முன்னிட விண்ணப்பம் தாக்கல் செய்திருக்கலாம். மேலே கூறப்பட்ட நடைமுறைகளைப் பின்பற்றாமல், இச்சட்டத்தின் பிரிவு 65-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பம், முதல்நிலையிலேயே நிலைக்கத்தக்கதல்ல. மேலே கூறப்பட்ட விசாரணை நீதிமன்றத்தின் வெளிப்படையான தவறின் காரணமாக, இந்த உரிமையியல் சீராய்வு மனு அனுமதிக்கப்பட்டு, எதிர்ப்புக்குள்ளான உத்தரவு ரத்து

செய்யப்படுகிறது. எனினும், உரிமை மாற்றம் வழங்குவதற்கான நோக்கத்திற்காக எந்த வருவாய் அலுவலரிடம் உயில் கொடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறதோ, அவரிடம் இச்சட்டத்தின் பிரிவு 66 ன் கீழ் ஒரு விண்ணப்பம் தாக்கல் செய்வதற்கு, எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு இன்னும் உரிமையுள்ளது என்றும், அந்த உயில் தொலைந்துவிட்டதாகக் கூறி அவரது தரப்பில் மறுக்கப்படும் பட்சத்தில், இரண்டாம் நிலை சாட்சியத்திற்கான விண்ணப்பத்தை நிலைக்கச்செய்யலாம்."

5. அதன்பின்பு, 24.01.1989 தேதியிட்ட அசல் உயிலை வருவாய் அதிகாரிகள் தாக்கல் செய்வதற்கு அறிவிப்பு வழங்கக்கோரி, மேல்முறையிட்டாளர்கள், விசாரணை நீதிமன்றத்தின் முன்பு இச்சட்டத்தின் பிரிவு 65/66-ன் கீழ் மற்றொரு விண்ணப்பத்தைத் தாக்கல் செய்தனர். மேல்முறையீட்டாளர்களுக்கு ஆதரவாக மாறுதல்கள் வழங்குவதற்காக, அசல் உயிலை அவர்கள் வருவாய் அதிகாரிகளிடம் ஒப்படைத்து விட்டனர் என்ற அடிப்படையில் அந்த விண்ணப்பமானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 24.01.1989 தேதியிட்ட உயிலை முன்வைக்குமாறு, வருவாய் அதிகாரிகள் இருவருக்குமே அறிவிப்பு வழங்கப்பட்டது. ஆனால் அவர்கள் அந்த உயிலைத் தாக்கல் செய்ய தவறிவிட்டனர். அதன்பின்பு தான், விண்ணப்பமானது 30.09.2015 தேதியிட்ட உத்தரவின்படி தள்ளுபடி செய்யப்பட்டது.

6. மேற்படி உத்தரவால் பாதிக்கப்பட்ட மேல்முறையீட்டாளர்கள், அரசமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறு 227 ன் கீழ் சீராய்வு மனு மூலம் உயர்நீதிமன்றத்தை அணுகியுள்ளனர்.

7. எதிர்ப்புக்குள்ளான உத்தரவு வெளிப்படையான சட்ட தவறுகளால் பாதிக்கப்பட்டுள்ளதாலும், அது சாட்சிய சட்டத்தின் பிரிவு 65 மற்றும் 66–ன் எழுத்து மற்றும் நோக்கத்திற்கு எதிராக அமைந்துள்ளதாலும், சட்டத்தின் பார்வையில் நிலைக்கத்தக்கதல்ல என மேல்முறையீட்டாளர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிட்டார். ஒரு அசல் ஆவணமானது, அந்த ஆவணம் யாருக்கு எதிராக நிரூபிக்கப்பட வேண்டுமோ அந்த நபரின் கைவசம் அல்லது நீதிமன்ற நடவடிக்கைகளால் தொடர்பு கொள்ள முடியாத நபர் அல்லது நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படாத நபரின் கைவசம் அல்லது அதிகாரத்தில் இருப்பதாகத் தோன்றினாலோ, காட்டினாலோ அல்லது அதனை முன்வைக்கச் சட்டப்படி கட்டுப்பட்ட நபர், அவருக்குப் பிரிவு 66 ல் குறிப்பிடப்பட்டுள்ள அறிவிப்பு கொடுக்கப்பட்ட பின்பும், அதனை முன்வைக்கவில்லை என்றாலோ, இச்சட்டத்தின் பிரிவு 66 (ஏ), இரண்டாம் நிலை சாட்சியம் வழங்க அனுமதிக்கிறது என்று மேலும் சுட்டிக்காட்டப்பட்டது. அத்தகைய எதிர்பாரா நிகழ்வுகளில், சம்பந்தப்பட்ட தரப்பினர், அதனை இரண்டாம் நிலை சாட்சியத்தின் மூலம் நிரூபிக்க உரிமையுடையவர். மேல்முறையிட்டாளர்கள், சாட்சிய சட்டத்தின் பிரிவு 66 –ன் கீழ், வருவாய் அலுவலர்களுக்கு, நீதிமன்றத்தின் மூலம் ஏற்கனவே அறிவிப்பு செய்துவிட்டனர், எனினும் வருவாய் அலுவலர்கள் இருவரும், இரண்டாம் நிலை சாட்சியத்தின் மூலம் தாக்கல் செய்வதற்குக் கோரிய உயிலினை வழங்கவில்லை எனவும் சமர்ப்பிக்கப்பட்டது.

8. மேலும் அசல் உயிலின் இருப்பினை, வாதத்தின் போது தான் நிரூபிக்க முடியும் என்றும், அதனை முதலில் நிரூபித்த பிறகுதான்

இரண்டாம் நிலை சாட்சியத்தை அனுமதிக்க வேண்டும் என்பது சட்டப்படி அவசியம் இல்லை என்றும் மேல்முறையீட்டாளர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் மேலும் வாதிட்டார்.

9. உயர்நீதிமன்றம் 09.01.2017 தேதியிட்ட எதிர்ப்புக்குள்ளான உத்தரவில், *"இந்த வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளின்படி, 24.01.1989 தேதியிட்ட அசல் உயில், அதன் அடிப்படையில் பதிவுசெய்து, மாற்றங்களுக்கு அனுமதி வழங்கவும் வருவாய் அதிகாரி(கள்) வசம் கொடுக்கப்பட்டது, எனினும் வருவாய் அதிகாரிகளான கிராம கணக்காளர்கள் பியாரிலால் மற்றும் ராகேஷ் குமார் ஆகியோருக்கு, 24.01.1989 தேதியிட்ட அசல் ஆவணத்தை முன்வைக்குமாறு இச்சட்டத்தின் பிரிவு 66ன் கீழ் அறிவிப்பு வழங்கப்பட்ட போதும், முற்றிலும் வியப்பூட்டும் வகையில் அதனை அவர்கள் முன்வைக்கத் தவறிவிட்டார்கள். எனவே முன் தேவையான நிபந்தனை, அதாவது உயிலின் இருப்பு கோப்பில் நிரூபிக்கப்படாமலே உள்ளது. மேலும் உயிலின் இருப்பு பற்றி அவர்கள் எங்குமே குறிப்பிடவில்லை. எனவே அதனைக் குறிப்பிட்டு, கற்றறிந்த விசாரணை நீதிமன்றம், 24.01.1989 தேதியிட்ட உயிலை இரண்டாம் நிலை சாட்சியத்தின் மூலம் நிரூபிக்க அனுமதி மறுத்துள்ளது, 30.09.2015 தேதியிட்ட உத்தரவு எவ்வித குறைபாட்டாலோ அல்லது சட்டமுரண்பாட்டாலோ பாதிக்கப்படவில்லை. மாறாக, அது முற்றிலும் கோப்பில் உள்ள சாட்சியங்கள் மற்றும் தீர்க்கப்பட்ட சட்ட முன்மொழிவுகள் அகியவற்றின்படி உள்ளது"* என்று குறிப்பிட்டுள்ளது. உயர்நீதிமன்றம், இரண்டாம் நிலை சாட்சியத்தை அனுமதிக்க முன் நிபந்தனை, அதாவது, உயிலின் இருப்பு

நிரூபிக்கப்படாமல் உள்ளது என்ற அடிப்படையில் விசாரணை நீதிமன்றத்தின் முடிவினை நிலைநிறுத்தி, சீராய்வு மனுவில் தகுதி எதுவும் காணவில்லை என அதனைத் தள்ளுபடி செய்தது.

10. சர்ச்சைக்குரிய விடயத்தை முறையாக மதிப்பிட, சட்டத்தின் பிரிவுகள் 65 மற்றும் 66–ஐ மீளாக்கம் செய்வது முறையாக இருக்கும், அது கீழ்கண்டவாறு உள்ளது :–

"***65. எந்த நேர்வுகளில், ஆவணங்கள் தொடர்பாக இரண்டாம் நிலைச் சாட்சியம் கொடுக்கப்படலாம்.*** *– ஆவணமொன்றின் இருப்பு, நிலை அல்லது உள்ளடக்கங்கள் பற்றி இரண்டாம் நிலை சாட்சியத்தைப் பின்வரும் நேர்வுகளில் கொடுக்கலாம் :–*

(ஏ) மூலமானது, எவருக்கு எதிராக அந்த ஆவணம் மெய்ப்பிக்க முனையப்படுகிறதோ அவருடைய, அல்லது நீதிமன்றத்தின் நீதிமுறை கட்டளைக்கு எட்டாத நிலையிலுல்ல, அல்லது அதற்கு உட்பட்டிராத எவருடைய, அல்லது அதைத் தாக்கல் செய்ய சட்டப்படி கட்டுப்பட்டிருந்து 66–வது பிரிவில் அறிவிப்புக்கு பின்பு, அதைத் தாக்கல் செய்யாத எவருடைய வசத்திலேனும் அல்லது அதிகாரத்திலேனும் இருப்பதாக காட்டப்படும்போதும் அல்லது தோன்றும் போதும்;

(பி) மூலத்தின் இருப்போ, நிலையோ அல்லது உள்ளடக்கங்களோ, எவருக்கு எதிராக அது மெய்ப்பிக்கப்படுகிறதோ அவரால் அல்லது அவரது உரிமைப்பிரதிநிதியால் எழுத்து மூலமாக ஏற்றுக்கொள்ளப்பட்டதாக மெய்ப்பிக்கப்பட்டிருக்கும்போது;

(சி) மூலமானது அழிந்து போயிருக்கும் போது அல்லது தொலைந்து போயிருக்கும் போது, அல்லது அதன் உள்ளடக்கத்தைப் பற்றிச் சாட்சியம் அளிக்க முன்வருகின்ற தரப்பினர், தம் தவறுகையால் அல்லது புறக்கணிப்பால் எழவல்லாத வேறெந்தக் காரணத்தாலேனும் நியாயமான காலத்திற்குள் அதைத் தாக்கல் செய்ய முடியாத போது;

(டி) எளிதாக எடுத்துச் செல்ல முடியாத அளவுக்கு மூலத்தின் தன்மை இருக்கும் போது;

(இ) மூலமானது 74–வது பிரிவின் பொருளின்படி ஒரு பொது ஆவணமாக இருக்கும் போது;

(எப்) மூலமானது ஒரு ஆவணமாக இருந்து, அதன் உறுதிச் சான்றளிக்கப்பட்ட நகலொன்று, சாட்சியமாக கொடுக்கப்படுவதற்கு இந்தச் சட்டத்திலோ, இந்தியாவில் அமலிலுள்ள வேறெந்தச் சட்டத்தாலோ அனுமதிக்கப்படும்போது;

(ஜி) மூலங்களானது நீதிமன்றத்தில் வசதியாக ஆய்வு செய்யப்பட முடியாதபடி ஏராளமான கணக்குகளையோ, அல்லது வேறு ஆவணங்களையோ கொண்டவையாக இருந்து, மெய்ப்பிக்கப்பட வேண்டிய பொருண்மையானது மொத்த தொகுப்பின் பொதுவான முடிவாக இருக்கும் போது;

– (ஏ) (சி) மற்றும் (டி) ஆகியவற்றில் கண்டுள்ள நேர்வுகளில், ஆவணத்தின் உள்ளடக்கத்தைப் பற்றிய எந்த இரண்டாம் நிலைச்சாட்சியமும் ஏற்கத்தக்கதாகும்.

– (பி)– யில் கண்டுள்ள நேர்வில், எழுத்து மூலமான ஏற்புறை ஏற்கத்தக்கதாகும்.

– (இ) அல்லது (எப்) வில் கண்டுள்ள நேர்வில், ஆவணத்தின் உறுதிச்சான்றளிக்கப்பட்ட ஒரு நகல் ஏற்கத்தக்கதாகுமேயொழிய, வேறு எந்த விதமான இரண்டாம் நிலை சாட்சியமும் ஏற்கத்தக்கது ஆகாது.

– (ஜி) யில் கண்டுள்ள நேர்வில், ஆவணங்களை ஆய்வு செய்திருக்கின்றவரும்; அத்தகைய ஆவணங்களை ஆய்வு செய்வதில் தேர்ச்சி பெற்றுள்ளவருமான எவரும், அவற்றிலிருந்து பொதுவாகப் பெறப்படுவது என்ன என்பது பற்றிச் சாட்சியம் கொடுக்கலாம்.

66. தாக்கல் செய்யுமாறு அறிவிப்பு கொடுப்பது பற்றிய விதிகள் – *65–வது பிரிவின் (ஏ) – கூறில் குறிப்பிடப்பட்ட ஆவணங்களின் உள்ளடக்கங்களைப் பற்றிய இரண்டாம் நிலை சாட்சியத்தைக் கொடுக்க உத்தேசித்திருக்கின்ற தரப்பினர், எந்தத்தரப்பினரது வசத்தில் அல்லது அதிகாரத்தில் அந்த ஆவணம் உள்ளதோ அந்தத் தரப்பினருக்கு, [அல்லது அவரது வழக்கறிஞருக்கு அல்லது வாதுரைஞருக்கு] சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்டபடி அதைத் தாக்கல் செய்யுமாறு முன்னரே அறிவிப்பு கொடுத்தாலன்றி, அவ்வாறு அறிவிப்பு எதுவும் சட்டத்தால் நிர்ணயிக்கப்படவில்லையென்றால் அப்போது, வழக்கின் சூழ்நிலைகளின்படி நியாயமானதென்று நீதிமன்றம் எண்ணுகிற*

அத்தகைய அறிவிப்பை கொடுத்தாலன்றி, அத்தகைய இரண்டாம் நிலை சாட்சியம் கொடுக்கப்படுதல் ஆகாது:

இருப்பினும் பின்வரும் நேர்வுகளில் ஏதேனுமொன்றிலோ அல்லது அறிவிப்பை வேண்டாமென்று தவிர்ப்பதற்கு பொருத்தமென்று நீதிமன்றம் நினைக்கும் வேறெந்த நேர்விலோ இரண்டாம் நிலைச் சாட்சியத்தை ஏற்கத்தக்கதாகச் செய்வதற்கு அறிவிப்பு அவசியம் ஆகாது:–

(1) *மெய்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணமே ஒரு அறிவிப்பாக இருக்கும் போது;*

(2) *அதைத் தாக்கல் செய்யுமாறு தாம் கோரப்படுவர் என்று வழக்கின் தன்மையிலிருந்து எதிர்த்தரப்பினர் அறிந்திருக்க வேண்டும் என்னும் போது;*

(3) *மூலத்தை மோசடியாலோ அல்லது வன்முறையாலோ எதிர்தரப்பினர் கைபற்றியிருக்கிறார் என்று தோன்றும்போது அல்லது மெய்ப்பிக்கப்படும்போது;*

(4) *எதிர்தரப்பினரோ அல்லது அவரது முகவரோ மூலத்தை நீதிமன்றத்தில் வைத்திருக்கும்போது;*

(5) *ஆவணம் தொலைந்து போனதாக எதிர்தரப்பினர் அல்லது அவரது முகவர் ஒப்புக்கொண்டிருக்கும்போது;*

(6) *ஆவணத்தைத் தம் வசம் வைத்துள்ளவர் நீதிமன்றத்தின் நீதிமுறைக் கட்டளைக்கு எட்டாதவராகவோ, அல்லது உட்பட்டிராதவராகவோ இருக்கும் போது."*

11. பிரிவு 65–ஐப் படித்து பார்க்கும்போது, ஒரு ஆவணத்தின் அசல் அந்த ஆவணம் யாருக்கு எதிராக தாக்கல் செய்ய வேண்டுமோ அந்த நபரின் கைவசம் அல்லது நீதிமன்ற நடவடிக்கைகளால் தொடர்பு கொள்ள முடியாத ஒரு நபர் அல்லது நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படாத நபரின் கைவசம் அல்லது அதிகாரத்தில் இருக்கிறது என காட்டினாலோ அல்லது தோன்றினாலோ அல்லது அதனைத் தாக்கல் செய்ய சட்டப்படி கட்டுப்பட்ட நபர் ஒருவருக்கு பிரிவு 66–ன் கீழ் அறிவிப்பு கொடுத்த பிறகு அந்த நபர் அதனைத் தாக்கல் செய்யாவிட்டாலோ அந்த ஆவணத்தின் இருப்பு, நிலை அல்லது உள்ளடக்கம் ஆகியவற்றைப் பொறுத்து இரண்டாம் நிலை சாட்சியம் அளிக்கலாம் என்பதைத் தெளிவுபடுத்துகிறது. இரண்டாம் நிலை சாட்சியத்தினை அனுமதிக்க, அசல் சாட்சியத்தினை ஏன் வழங்கவில்லை என்பதற்கான காரணங்களுக்கு அடிப்படை சாட்சியங்கள் அளிக்க வேண்டும் என்பது முடிவு செய்யப்பட்ட சட்ட நிலை ஆகும்.

12. இதற்கு ஓரளவு ஒத்த சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளிலிருந்து எழுந்த பிரச்சனையை, இந்நீதிமன்றம், **அஷோக் துலிசந்த் எதிர் மாதவ்லால் டுபே மற்றும் ஒருவர்**[1] என்ற வழக்கில் பரிசீலித்து கீழ்கண்டவாறு தீர்வு கண்டது.

> *" இந்திய சாட்சிய சட்டத்தின் பிரிவு 65–ன் கூறு (ஏ) ன் படி, ஒரு ஆவணத்தின் அசல், அந்த ஆவணம் யாருக்கு எதிராக நிரூபிக்கப்பட வேண்டுமோ அந்த நபரின் கைவசம் அல்லது நீதிமன்ற நடவடிக்கைகளால் தொடர்பு கொள்ள முடியாத நபர்*

[1] [1976] 1 SCR 246

அல்லது நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படாத நபரின் கைவசம் அல்லது அதிகாரத்தில் இருப்பதாகத் தோன்றினாலோ, காட்டினாலோ அல்லது அல்லது அதனைத் தாக்கல் செய்யச் சட்டப்படி கட்டுப்பட்ட நபர் ஒருவர் அதனை தாக்கல் செய்ய அவருக்கு பிரிவு 66–ல் குறிப்பிட்டுள்ளவாறு அறிவிப்பு வழங்கிய பின்னும், தாக்கல் செய்யாவிட்டாலோ, ஒரு ஆவணத்தின் இருப்பு, நிலை மற்றும் உள்ளடக்கங்கள் குறித்து இரண்டாம் நிலை சாட்சியம் அளிக்கலாம். பிரிவு 65–ன் (பி) முதல் (ஜி) வரை உள்ள கூறுகள், ஒரு ஆவணத்திற்கு இரண்டாம் நிலை சாட்சியம் எப்போது வழங்கலாம் என்ற பிற எதிர்பாரா நிகழ்வுகள் பற்றி குறிப்பிடுகிறது".

13. **ராகேஷ் மொஹிந்தரா எதிர் அனிதா பெரி மற்றும் பலர்**[2] என்ற வழக்கில் இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது :–

"15. இரண்டாம் நிலை சாட்சியம் அளிப்பதற்கான முன்நிபந்தனைகள் யாதெனில், அத்தகைய ஆவணங்களைச் சார்ந்திருக்கும் நபரால் தனது சிறந்த முயற்சியின் பின்பும் அந்த ஆவணங்களின் அசலைத் தாக்கல் செய்யமுடியவில்லை என்பதும், அவ்வாறு தாக்கல் செய்ய முடியாதது அவரது கட்டுப்பாட்டை மீறியது என்பதுமாகும். இரண்டாம் நிலை சாட்சியம் அளிப்பதற்கு கோரிக்கை விடும் நபர், முதல்நிலை சாட்சியம் அளிக்காததற்குரிய காரணத்தை நிரூபிக்க வேண்டும். அந்த அசல் ஆவணமானது தொலைந்ததாகவோ அல்லது அழிந்ததாகவோ அல்லது ஆவணம் யாருக்கு எதிராக

[2] (2016) 16 SCC 483

பயன்படுத்த கோரப்படுகிறதோ அவர் அதனை வேண்டுமென்றே நிறுத்தி வைத்துள்ளார் என்றோ நிறுவிக்காட்டாத பட்சத்தில், அந்த ஆவணத்தைப் பொறுத்து இரண்டாம் நிலை சாட்சியத்தை ஏற்க முடியாது"

14. சாட்சிய சட்டம் 1872–ன் கீழ், பொருண்மைகள் முதன்மை சாட்சியத்தின் மூலம் நிறுவிக்காட்டப்பட வேண்டும் என்பதும், இரண்டாம் நிலை சாட்சியமானது அந்த விதிக்கான விலக்கு என்பதும், அதற்கு முதன்மை சாட்சியத்தின் இருப்பை விளக்கும் பொருட்டு அடிப்படை சங்கதிகளை நிறுவிக்காட்ட வேண்டும் என்பதும் உறுதியான அடிப்படை சட்டமாகும். **எச். சித்திக் (இறப்பு) அவரது சட்டப்பிரதிநிதிகள் மூலம் எதிர் ராமலிங்கம்**[3], என்ற வழக்கில் நம்பத்தகுந்த காரணமின்றி அசல் ஆவணங்கள் தாக்கல் செய்யாத போதும், இரண்டாம் நிலை சாட்சியம் அளிப்பதற்கான அடிப்படை பொருண்மைகளை நிறுவிக்காட்டாத போதும், ஒரு தரப்பினர் இரண்டாம் நிலை சாட்சியம் வழங்குவதற்கு நீதிமன்றம் அனுமதியளிக்க இயலாது என இந்த நீதிமன்றம் வலியுறுத்தியுள்ளது.

15. இந்த வழக்கில் சாட்சிகளின் சாட்சியங்களைப் பரிசீலித்த பின்புதான் அசல் உயிலின் இருப்பு, இழப்பு அல்லது அழிவு குறித்து கருத்து காணமுடியும் என்பதால் சாட்சிகளின் சாட்சியங்களை மதிப்பிடுவது கட்டாயமாகும். வருவாய் அதிகாரிகள் இருவரும் அசல் உயிலை தாக்கல் செய்ய தவறிய நிலையில், மேலும், குறுக்கு விசாரணையைப் பார்வையிடும் போது அதிகாரிகள் எவருமே உயிலின் இருப்பினை குறித்து தெளிவாகவும் ஐயமின்றியும் மறுக்கவில்லை

[3] [2011 (4) SCC 240]

என்பது தெளிவாகிறது. அ.சா 3 ராகேஷ் குமார், தனது குறுக்கு விசாரணையில், அந்தப் பகுதியில் மற்றொரு கிராம கணக்காளர் இருந்ததாகவும் அந்த உயில் மற்றொரு கிராம கணக்காளரிடம் கொடுக்கப்பட்டதா என்பது பற்றி தனக்கு தெரியாது எனவும் கூறியுள்ளார். மேலும் தொடர்ந்து அவர், அது 25 வருடம் பழமையானது என்றும் அவர் தற்சமயம் அந்த பகுதிக்குப் பணியமர்த்தப்படவில்லை என்பதால் அந்த உயிலை கண்டு பிடிக்க முடியவில்லை எனவும் கூறியுள்ளார். மேலும் அ.சா. 4, *"பதிவு செய்யப்பட்ட ஒரு உயில் இருந்தது என்றும் அது உள்ளிடப்பட்டுள்ளது என்றும் பாபுசிங்கின் கட்சி (பதிவு செய்யப்படாத) உயில் ஒன்று இருந்தது என்றும், அது மாற்றம் பதிவதற்காக கணக்காளர் ராகேஷ் குமாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது..."* என்று ஒப்புக்கொண்டுள்ளார். மேலும் உயிலின் இருப்பு தொடர்பான முதல்நிலை சாட்சியம், கேள்விக்குறிய உயிலை எழுதியவரான அ.சா. 1 தர்ஷன் சிங்கின் விசாரணையிலிருந்து நிறுவிக்காட்டப்பட்டுள்ளது. அவர் கீழ் கண்டவாறு சாட்சியம் அளித்துள்ளார்:–

> *"எழுதியவராகவும் சாட்சியாகவும் எனது கையொப்பத்தை கொண்டிருக்கும் 24.01.1989 தேதியிட்ட உயிலை நான் பார்த்திருக்கிறேன்"*

16. கையிலுள்ள இந்த வழக்கில் நிலவும் மேலே கூறப்பட்டுள்ள பொருண்மை நிலைகளிருந்து, இரண்டாம் நிலை சாட்சியம் வழங்குவதற்கான உரிமையினை நிறுவிக்காட்ட அடிப்படை பொருண்மைகளை மேல்முறையீட்டார்கள் வகுத்துரைத்துள்ளதால், இரண்டாம் நிலை சாட்சியம் வழங்க உயர்நீதிமன்றம் அவர்களுக்கு

ஒரு வாய்ப்பு வழங்கியிருக்க வேண்டும். சாட்சியங்களை முறையாகப் பரிசீலிக்காமல், முன்நிபந்தனை, அதாவது உயிலின் இருப்பு கோப்பில் நிரூபிக்கப்படவில்லை எனக் கண்டு, இரண்டாம் நிலை சாட்சியம் அளிக்க மேல்முறையீட்டார்களுக்கு அனுமதி மறுத்து, உயர்நீதிமன்றம் மிகப்பெரிய சட்ட தவறு செய்துவிட்டது.

17. ஒரு ஆவணத்தை சாட்சியத்தில் அனுமதிப்பதாலோ, அதனைக் குறியிடுவதாலோ மட்டுமே, சட்டப்படி அதனை நிரூபிக்காத பட்சத்தில், தானாகவே அது நிரூபிக்கப்பட்டதாக ஆகாது என்று இங்கே குறிப்பிட வேண்டிய அவசியமில்லை.

18. மேலே கூறப்பட்டுள்ள சட்ட மற்றும் சங்கதி நிலைப்பாட்டின் அடிப்படையில், எங்களது தேர்ந்த கருத்தில், உயர்நீதிமன்றத்தின் எதிர்ப்புக்குள்ளான தீர்ப்பு, முக்கிய அடிப்படை ஒழுங்கின்மையாலும் வெளிப்படையான சட்டதவறுகளாலும் பாதிக்கப்பட்டுள்ளது, எனவே அது நீக்கறவு செய்யப்படுகிறது. அதன்படி இந்த மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது.

19. கேள்விக்குறிய உயில் தொடர்பாக, இரண்டாம் நிலை சாட்சியம் அளிக்க மேல்முறையீட்டாளர்கள் உரிமையுடையவர்கள். எனினும் அவ்வாறு இரண்டாம் நிலை சாட்சியத்தினை அனுமதிப்பது என்பது, அதன் மெய்மை, உண்மைதன்மை அல்லது நம்பகத்தன்மை ஆகியவற்றைத் தானாக சான்றளிக்காது, விசாரணையின் போது அதனைச் சட்டப்படி நிறவிக்காட்ட வேண்டும் என்றும் இங்கு தெளிவு படுத்தப்படுகிறது.

20. இந்த வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளின்படி, செலவு தொடர்பாக நாங்கள் எந்த உத்தரவும் பிறப்பிக்கவில்லை.

மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டது

பொறுப்புத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."